**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்தியவானிலைத்துறை**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம், கோவை**
**கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(30.07.2022 முதல் 03.08.2022 )**

**அறிக்கை எண் 060/2022** **தேதி.29.072022**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 20°செ முதல் 27°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் பரவலாக மழை பெறப்பட்டது.

### கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (26.07.2022 முதல் 28.07.2022) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 03.08.2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 26/07 | 27/07 | 28/07 | தேதி | நாள் -1 30/07 | நாள்-2 31/07 | நாள்-3 01/08 | நாள்-4 02/08 | நாள்-5 03/08 |
| 0.0 | 5.0 | 23.8 | மழை (மி.மீ) | 20 | 15 | 18 | 25 | 35 |
| 33 | 31 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 34 | 32 | 32 | 29 | 29 |
| 24 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 22 | 22 | 21 | 21 | 21 |
| 7 | 6 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 7 | 7 | 7 |
| 88 | 88 | 85 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 85 |
| 91 | 62 | 50 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 60 | 70 |
| 8 | 8 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| 90 | 250 | 90 | காற்றுவீசும் திசை | 230 | 250 | 250 | 250 | 270 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (30.072022 முதல் 03.08.2022)

வரும் நாட்களில் வானம் இலேசான மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் ஐந்து நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 29°செ முதல் 34°செ ஆகவும், குறைந்த பட்ச வெப்பநிலை 21°செ முதல் 22°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும்

கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன பாளையம் | பொள்ளாச்சி வடக்கு | பொள்ளாச்சி தெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பெட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| 30-07-2022 | 40 | 52 | 53 | 48 | 51 | 52 | 43 | 43 | 52 | 51 | 52 | 50 |
| 31-07-2022 | 29 | 44 | 43 | 41 | 46 | 46 | 33 | 33 | 47 | 43 | 46 | 44 |
| 01-08-2022 | 59 | 59 | 59 | 60 | 60 | 60 | 59 | 59 | 60 | 59 | 60 | 60 |
| 02-08-2022 | 45 | 59 | 64 | 56 | 61 | 63 | 49 | 49 | 62 | 55 | 60 | 60 |
| 03-08-2022 | 190 | 219 | 223 | 242 | 277 | 268 | 206 | 206 | 266 | 224 | 255 | 266 |

**வேளாண் அறிவுரை**

| | | |
|---|---|---|
| **பொது அறிவுரை** | | அடுத்த **5** நாட்களுக்கு மிதமானது முதல் கன மழை எதிர் பார்க்கப்படுபிறது.<br>தொடர்ந்து மழை பெய்து வருவதால் அனைத்துப்பயிர்களுக்கும் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும்.<br>மேற்கு தொடர்ச்சி மழையடிவாரங்களில் அதிக மழைக்கு வாய்ப்புள்ளதால் சரிவுக்கு குறுக்காக வடிகால் வசதி ஏற்படுத்தி மண் அரிப்பினை தடுக்கவேண்டும். |
| நெல் | நடவு | கன மழை எதிர்பார்க்கப்படுவதால் நெல் பயிரினை நடவு செய்வதனை ஒத்தி வைக்க வேண்டும். |
| மக்காச்சோளம் | வளர்பருவம் | நடவு செய்து **30** நாட்களான இறவை மக்காச்சோளப்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு **55** கிலோ யூரியா மற்றும் **12** கிலோ பொட்டாஷை களை எடுத்த பின்பு மேலுரமாக இடவும்.<br>பெறப்பட்ட மழை மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி, இறவையில் மக்காச்சோள விதைப்பைத் தொடரவும். |
| நிலக்கடலை | வளர்பருவம் | தற்போது நிலவும் வானிலையால் மானாவாரி நிலக்கடலையில் செர்கொஸ்போரா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணிக்கவும். நோய் ஏற்கனவே தாக்கி இருந்தால் மேங்கோசெப் என்ற பூஞ்காணக்கொல்லியை ஒரு லிட்டர் தண்ணீருக்கு **2.5** கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும். |
| பருத்தி | | தொடர் மழையினால் மானாவாரியில் விதைக்கப்பட்டுள்ள பருத்தியில் முளைப்புத்திறன் குறைந்து காணப்படுகிறது. எனவே விதைப்பின் போது பாலித்தீன் பைகளிலும் சிறிது நாற்றுகளை தயார் செய்து பின்னர் நடவு செய்வதன் மூலம் சரியான பயிர் எண்ணிக்கையை பராமரிக்கவும். |

| | | |
|---|---|---|
| | | 150 நாட்கள் வயதுடைய முன் பருவ கரும்பில் துளைப்பான் பூச்சியின் தாக்கத்தை குறைக்க வேண்டும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பின்பருவ கரும்பிற்கு மேலுரமாக 90 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்த தழைச்சத்து மற்றும் 37 கிலோ சாம்பல் சத்து உரங்களை இட வேண்டும். |

| | | |
|---|---|---|
| தக்காளி | நாற்றாங்கால் | நடவு செய்யப்படும் தக்காளியில் மண்ணிலிருந்து பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு 2.5 கிலோ ட்ரைக்கோடெர்மா விரிடி உயிர் பூஞ்சாணக்கொல்லியினை 50 கிலோ தொழுஉரத்துடன் கலந்து இடவேண்டும். |
| கறிவேப்பிலை | | நிலவும் வானிலையால் கறிவேப்பிலையில் இலைப்புள்ளி நோய் தென்படுகிறது. இதைக்கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் கார்பன்டசிம் கலந்து தெளிக்க வேண்டும். |
| வாழை | | மழையுடன் காற்றின் வேகம் அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்க வேண்டும்.<br>நிலவும் வானிலையினால் வாழையில் சிகாடாகா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளதால் கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பென்டாசிம் 1 கிராம் (அ) மேங்கோசெப் 2 கிராம் (அ) காப்பர் ஆக்சி குளோரைட் 2 கிராம் (அ) குளோரோத்தலனில் 2.5 கிராம் தெளிக்க வேண்டும். |
| தேயிலை | | வால்பாறை பகுதிகளில் தேயிலை தோட்டங்களிலுள்ள மரங்களுக்கு கவாத்து செய்ய அறிவுருத்தப்படுகிறது. |
| தென்னை | | எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி தென்னை மரங்களுக்கு முதல் உரமாக மரம் ஒன்றிற்கு யூரியா 650 கிராம் சூப்பர் பாஸ்பேட் 1 கிலோ, பொட்டாஷ் 1 கிலோ மற்றும் வேப்பம்புண்ணாக்கு 2 கிலோவினை 50 கிலோ எருவுடன் கலந்து இட வேண்டும்.<br>தென்னை மரங்களைச் சுற்றிலும் உள்நோக்கிய வட்டப்பாத்தி எடுப்பதால் மழைநீரினை வேர்ப்பகுதியில் சேமிக்க வேண்டும். |
| கால்நடைகள் | | நிலவும் வானிலையில் கறவை மாடுகளில் மடி வீக்க நோய் தென்பட வாய்ப்புள்ளது. எனவே பால் கரக்கும் முன்னும் பின்னும் மடியை 1 சதம் பொட்டாஷியம் பெர்மாங்கனேட் கலவையில் நன்கு கழுவ வேண்டும்.<br>பருவமழை ஆரம்பித்துவிட்டதால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் ஆடுகளுக்கு துள்ளுமாரி மற்றும் நீலநாக்கு நோய்க்கான தடுப்பூசி போடவேண்டும். மேலும் குடற்புழு நீக்கம் செய்யவேண்டும்.<br>மழையுடன் காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழி கூடாரங்களை சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிட்டு காற்றின் வேகத்தை குறைக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி

- நிலவும் வானிலையால் நிலக்கடலையில் செர்கொஸ்போரா இலைப்புள்ளி நோய் தாக்கி இருந்தால் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 கிராம் மேங்கோசெப் பூஞ்சாணக்கொல்லியை கலந்து தெளிக்க வேண்டும்.